DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.304/2019**

**P.W.5**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : சிங்கம்

Father Name : ரபேல்

VILLAGE :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2024.

( 2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜர் இல்லை. 1 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது மதுரை மாநகர் வெடிகுண்டு தடுப்பு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.11.2016 ம் தேதி நீதித்துறை நடுவர் எண்.2 உசிலம்பட்டி அவர்களின் உத்தரவு கடிதத்தின் பேரில் நானும் என்னுடன் பணிபுரியும் தலைமை காவலர் 7409 அம்ரோஸ் பிரிட்டோ மற்றும் தலைமை காவலர் 7405 சுகுமாறன் அடங்கிய குழு ஒன்று மதுரை மாநகர காவல் ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படியும், உதவி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி, எங்களது வெடிகுண்டு தடுப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து காலை 09.30 மணியளவில் புறப்பட்டு, மதுரை புறநகரத்தில் உள்ள மதுரை செக்கானூரணி புறக்காவல் நிலையம் சென்று அறிக்கை செய்தோம். அதன்பிறகு குற்ற எண்.141/2016 ல் உள்ள வெடிபொருட்களை அழிப்பதற்காக அதே காவல் நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணன் என்பவரையும் அழைத்துக்கொண்டு கரடிக்கல்லில் உள்ள கல் குவாரியில் உள்ள

வெடிபொருட்கள் வைக்கும் குடோனிற்கு சென்று அங்கு P.R.No.40/2016 என்ற எண்ணில் உள்ள வெடிபொருட்களை சரிபார்த்து அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டோம். அதன்பிறகு குடோனிலிருந்து கிடைக்கப்பெற்ற வெடிபொருட்களானது 1200 ஜெலடின்கள் மற்றும் 700 எலக்ரிக் டெடனேட்டர்களை ஆகியவற்றை கல்குவாரியில் கொண்டு போய் தனியாக 1200 ஜெலடின்களை எரித்தும், 700 எலக்ரிக் டெடனேட்டர்களை வெடிக்க செய்தும், பின்னர் அதே இடத்திலிருந்து எரிந்த நிலையில் இருந்த மண் 10 கிராமும், எரிப்பதற்கு முன்பு இருந்த 10 கிராம் மண்ணும், எரியாத ஜெலடின் குச்சியிலிருந்து 10 கிராம் வெடிமருந்தும் தனித்தனியாக எடுத்து பிளாஸ்டிக் கவரில் பேக் செய்துகொண்டோம். அதன்பிறகு மேல்நடவடிக்கைக்காக பேக் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தையும் சீல் செய்து செக்கானூரணி காவல் சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணன் அவர்கள் மூலமாக ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைக்குமாறு கொடுத்தோம். மேலும் மேற்படி இடத்திலிருந்து அழிப்பதற்கு முன்பும் மற்றும் அதற்கு பின்பும் எடுக்கப்பட்ட புகைப்படங்களை இரண்டு நகல்களுடன் சார்பு ஆய்வாளர் கிருஷ்ணனிடம் மற்றும் அனைத்து ஆவணங்களையும் மேல்நடவடிக்கைக்காக ஆய்வாளரிடம் ஒப்படைப்பதற்கு எங்களால் கொடுக்கப்பட்டது. என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் யார் மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் நீதிமன்ற உத்தரவை பார்த்தேன். நான் போலிசார் விசாரணையில் மதுரை காவல் ஆணையரின் உத்தரவின் பேரில் செக்கானூரணி காவல் நிலையம் சென்றதாக சொல்லவில்லை. காவல் ஆணையரின் ஆணையை நான் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அவ்வாறு காவல் ஆணையர் எந்த உத்தரவும் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு ஒப்படைத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எங்கள் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு

செக்கானூரணி புறக்காவல் நிலையத்தில் அறிக்கை செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் வெடிபொருள் வைக்கும் குடோனிற்கு சென்றதாகவும் வெடிபொருளை சரிபார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் எங்களை போலிசார் விசாரிக்கமாட்டார்கள், நீதிமன்ற உத்தரவுப்படி நாங்கள் அழித்து அறிக்கை செய்தோம். நான் போலிசாரிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை. நான் எரிந்த நிலையில் உள்ள மண் 10 கிராம் மற்றும் எரியாத நிலையில் உள்ள மண் 10 கிராம் எடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 10 கிராம் ஜெலடின் மாதிரி எடுத்ததாகவும் புகைப்படங்கள் அழிப்பதற்கு முன்பும் அழித்ததற்கு பிறகும் எடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கரடிக்கல் கல் குவாரி யாருக்கு சொந்தமானது என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்துக்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி குடோனில் எத்தனை பேக்கிங்கள் ஜெலடின் குச்சிகளை வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அது போல் ஜெலடின் குச்சிகள் மற்றும் எலக்ரிக் டெடனேட்டர்களின் தயார் செய்த கம்பெனி மற்றும் Batch No. மற்றும் தேதி எனக்கு தெரியாது. பொதுவாக கல் குவாரிகளில் வெடிமருந்து, வெடிபொருட்கள் பயன்படுத்துவது வழக்கம் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எந்த வெடிபொருட்களையும் மற்றும் ஜெலடின்களையும் அழிக்கவில்லை என்றும் எந்த மாதிரிகளையும் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.